# யாழ்ப்பாணக் கிறிஸ்தவ சிற்பக் கலைஞர்களும் சமகால சவால்களும்

**ருக்க்ஷனா வேலாயுதம்**
*Department of Fine Arts, University of Jaffna*

**ஆய்வுச் சுருக்கம்**

*ஒரு சமூகத்தின் இருப்பை நிலைநிறுத்துவதில் அச்சமூகம் சார்ந்து உருவாகியுள்ள கலைவெளிப்பாடுகளுக்கு பிரதான பங்குண்டு. அச்சமூகம் சார்ந்து உருவான காண்பியக்கலைகளைத் தவிர்த்து அதன் பண்பாட்டு வரலாற்றினைப் புரிந்துகொள்ளுதல் என்பது முழுமையடையாது என்ற அடிப்படையில் யாழ்ப்பாணக் கிறிஸ்தவ சிற்பக் கலைஞர்களின் கலைப்பயில்வுகள் மற்றும் சமகாலச் சவால்கள் பற்றிய விசாரணையாகவே இக்கட்டுரை அமைகின்றது. மேலைத்தேயத்திலிருந்து பரவி இலங்கைத் தீவிலும் தமிழ்ப் பண்பாட்டிலும் கிட்டத்தட்ட 400 வருடங்களைக் கடந்த நீண்ட வரலாற்றையுடைய கிறிஸ்தவமதம் உள்ளூரவரின் சமூகப் பண்பாட்டிலும் கலைப் பயில்வுகளிலும் ஒன்றுகலந்துள்ள நிலையில் எழுதப்பட்ட இலங்கைக் கலைவரலாற்றில் கிறிஸ்தவக் கலைகள் மற்றும் கலைஞர்கள் தொடர்பாக கவனத்திலெடுக்கப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ சிற்பங்களைக் குருநகரில் புதுமைமாதா கோவிலைச் சூழவுள்ள கடைஞர் என்கின்ற சாதியைச் சேர்ந்த கலைஞர்களே உருவாக்கியுள்ளனர். இவர்கள் குருநகர் கடற்கரையோரங்களில் காணப்படும் சிப்பிகளைப் பொறுக்கி அவற்றை தீச்சுவாலையிலிட்டுக் கடைந்து, சுண்ணாம்பாக்கி வெள்ளை பூசுவதையே தமது ஆரம்பத் தொழிலாகச் செய்து வந்தனர். இதனாலேயே இவர்கள் கடைஞர்கள் என அழைக்கப்பட்டனர். இவர்களே பிற்காலத்தில் சிற்பக் கலைஞர்களாகவும் ஓவியர்களாகவும் உருவாகியதுடன் கட்டட மேஸ்த்திரிகளாகவும் இருந்துள்ளனர். ஆரம்பங்களில் மேலைத்தேய பாதிரிமார்களின் வழிகாட்டலுக்குக்கீழ் அவர்களால் வழங்கப்பட்ட உருவப்படங்களை மாதிரிகளாகக்கொண்டு சிற்பங்களை உருவாக்கிப் பழகிய உள்ளூர்க் கலைஞர்கள் மேலைத்தேய இயற்பண்பு மற்றும் மாயவாதப் பண்புகளைப் படிப்படியாகக் கற்றுக்கொண்டுள்ளனர். காலனியத்தைத் தொடர்ந்து பல்வேறு கலைஞர்கள் சுதந்திரமாகச் செயற்பட்டுவந்துள்ள நிலையில் அவர்களால் பல்வேறு சிற்பங்கள் யாழ்ப்பாணத்திலும் யாழ்ப்பாணத்திற்கு வெளியிலும் உருவாக்கப்பட்டுள்ளன. இவர்கள் ஆரம்பத்தில் தேவாலயங்களிலும் பிற்காலத்தில் தேவாலயத்திற்கு வெளியிலும் குறிப்பாக வீடுகள், சேமக்காலைகளிலும் சிற்பங்களைச் செய்துள்ளனர். இந்தப் பின்னணியில் பண்பியல் சார்ந்த ஆய்வாக இது அமைவதுடன் கள ஆய்வு மூலமான நேரடி அவதானிப்பு, நேர்காணல்கள் என்பவற்றைப் பயன்படுத்தி உருவவாதம் மற்றும் சமூகவரலாறு போன்ற கலைவரலாற்று ஆய்வு அணுகுமுறைகளைக் கையாண்டு வருணனை மற்றும் ஒப்பியல் ஆய்வாக முன்வைக்கப்படுகிறது. ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவக் கலைகளின் மையமாக குருநகர் விளங்கியுள்ள நிலையில் குறித்த கலைஞர்கள் பற்றியோ அங்குள்ள கலைவெளிப்பாடுகள் பற்றியோ ஆழமான வாசிப்புக்கள் கலைவரலாற்றில் பேசப்படாமலுள்ளன. ஆகவே அவற்றை ஆய்வு செய்தல் என்பது ஒரு சமூகத்தின் இருப்பையும், தொன்மையையும், அடையாளத்தையும் உறுதிப் படுத்துவதாகவும் ஆவணப்படுத்துவதாகவும் அமையும். நவீன தொழிநுட்ப வளர்ச்சி, வெகுசனப் பண்பாடுகள், கல்வித்துறைகளில் ஏற்பட்டுள்ள பல முன்னேற்றங்களினாலும் இன்றைய தலைமுறையினருக்குக் குறித்த கலைப்பயில்வுகளிலுள்ள*

*ஆர்வமின்மையாலும் எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க தமிழ்க்கிறிஸ்தவ சிற்பக்கலைஞர்கள் இல்லாது போவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. ஆகவே இருக்கும் காலத்திலேயே அவர்களையும் அவர்களது படைப்புக்களையும் ஆய்வு செய்து ஆவணப்படுத்துவது அவசியமாகும். உள்ளூர்க் கலைஞர்களை ஊக்குவித்தல் வெளியூர்களிலிருந்து சிற்பங்களை வாங்வதற்குப் பதில் உள்ளூர்க் கலைஞர்களுக்கு வாய்ப்பளித்தல் மற்றும் இன்றைய இளைஞர்களுக்கு இவைசார்ந்த முக்கியத்துவத்தை உணரச்செய்வதுடன் விளிப்புணர்வூட்டுதல் என்பன குறித்த கலைஞர்களின் சமகாலச் சவால்களுக்கு தீர்வாக அமையும்.*

***திறவுச் சொற்கள் -*** *கலப்பொட்டு, காலனியம், குறியீடு, சுதை, சொரூபம், பாணி, யதார்த்தவாதம்*